# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

1-A

**ளுஹாத் தொழுகையைப் பேணித் தொழுது வாருங்கள் என்பது நபி(ﷺ) அவர்கள் தனது தோழர்களுக்கு செய்த வஸிய்யத்துக்களில் ஒன்றாகும்**

என் உற்ற தோழர் நபி(ﷺ) அவர்கள் ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது, இரண்டு ரக்அத்கள் **ளுஹாத் தொழுவது**, வித்ர் தொழுதுவிட்டு உறங்குவது ஆகிய மூன்று விஷயங்களை எனக்கு அறிவுறுத்தினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1303

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

1-B

**ளுஹாத் தொழுகையைப் பேணித் தொழுது வாருங்கள் என்பது நபி(ﷺ) அவர்கள் தனது தோழர்களுக்கு செய்த வஸிய்யத்துக்களில் ஒன்றாகும்**

என் நேசர் நபி(ﷺ) அவர்கள் ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது,
**ளுஹாத் தொழுவது**,
வித்ர் தொழாமல் உறங்கலாகாது ஆகிய மூன்று விஷயங்களை நான் வாழ்நாளில் ஒருபோதும் கைவிடக்கூடாது என எனக்கு அறிவுறுத்தினார்கள்.

அறிவிப்பவர்: அபுதர்தா(ரலி) அவர்கள்,முஸ்லிம் 1304

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

2

## ஒருவர் இரண்டு ரக்அத் ளுஹாத் தொழுவதன் மூலம் தமது உடலிலுள்ள ஒவ்வொரு மூட்டிற்காகவும் தர்மம் செய்த நன்மையை அடைந்து கொள்கிறார்

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்,
உங்களில் ஒருவர் ஒவ்வொரு காலையிலும் (தமது உடலிலுள்ள) ஒவ்வொரு மூட்டிற்காகவும் தர்மம் செய்வது கடமையாகும்.

இறைவனைத் துதிக்கும் ஒவ்வொரு துதிச் சொல்லும் (சுப்ஹானல்லாஹ்) தர்மமாகும். ஒவ்வொரு புகழ்மாலையும் (அல்ஹம்து லில்லாஹ்) தர்மமாகும். ஒவ்வொரு "ஓரிறை உறுதிமொழி"யும் (லா இலாஹ இல்லல்லாஹ்) தர்மமாகும்; அவனைப் பெருமைப்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் (அல்லாஹு அக்பர்) தர்மமே!

நல்லதை ஏவுதலும் தர்மமே! தீமைகளைத் தடுத்தலும் தர்மமே! **இவை அனைத்திற்கும் (ஈடாக) முற்பகல் நேரத்தில் (ளுஹா) இரண்டு ரக்அத்கள் தொழுவது போதுமானதாக அமையும்.**

அறிவிப்பவர்: அபூதர்(ரலி) அவர்கள், முஸ்லிம் 1302

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

3

## வானவர்கள் சாட்சியமளிக்கக்கூடிய, வருகை தரக் கூடிய தொழுகை

“தொழுகையைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்!” என்று கேட்டேன்.

அதற்கு நபி(ﷺ) அவர்கள்,

“சுப்ஹுத் தொழுகையைத் தொழுங்கள். பின்னர் சூரியன் உதயமாகி உயரும்வரை தொழுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். ஏனெனில் அது ஷைத்தானின் இரு கொம்புகளுக்கிடையே உதயமாகிறது. அப்போதுதான் இறைமறுப்பாளர்கள் அதற்கு சிரவணக்கம் செய்கின்றனர். பின்னர் தொழுங்கள். அந்த நேரத்தில் தொழப்படும் தொழுகை வானவர்களால் சாட்சியமளிக்கப்படக்கூடியதும், வானவர்கள் வருகை தரக்கூடியதுமாகும்...”

(ஹதீஸின் ஒரு பகுதி)

அம்ர் பின் அபஸா அஸ்ஸுலமீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 1512

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

4-A

## ளுஹாத் தொழுகைக்கு சிறந்த நேரம்

காசிம் பின் அவ்ஃப் அஷ்ஷைபானீ(ரஹ்) அவர்கள் கூறியதாவது:
ஸைத் பின் அர்கம்(ரலி) அவர்கள் "ளுஹா" தொழுதுகொண்டிருந்த ஒரு கூட்டத்தாரைக் கண்டார்கள். அப்போது:

"இந்தத் தொழுகையை இந்நேரத்தில் அல்லாமல் வேறு நேரத்தில் தொழுவதே சிறந்தது என்பதை இவர்கள் அறிய வேண்டாமா? அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள், 'சுடுமணலில் ஒட்டகக்குட்டியின் கால் குழம்புகள் கரிந்துவிடும் நேரமே அவ்வாபீன் தொழுகையின் நேரமாகும்' என்று கூறினார்கள்."

**குறிப்பு:**

"அவ்வாபீன்" என்பதும் ளுஹாத் தொழுகைக்குரிய பெயரே. "அவ்வாபீன்" என்ற சொல்லுக்கு "அல்லாஹ்விடம் அடிக்கடி மீள்பவர்கள், பாவமன்னிப்பு தேடுபவர்கள்" என்று பொருள்.

إِن تَكُونُوا صَٰلِحِينَ فَإِنَّهُۥ كَانَ لِلْأَوَّٰبِينَ غَفُورًا

"நீங்கள் நல்லவர்களாக இருந்தால், அல்லாஹ் மீள்பவர்களுக்கு மிக மன்னிப்பவனாக இருக்கின்றான்." பனீ இஸ்ராயீல் 17:25

முஸ்லிம் 1361

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

4-B

## ளுஹாத் தொழுகைக்கு சிறந்த நேரம்

ஸைத் பின் அர்கம்(ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் (மதீனாவிற்கு அருகிலுள்ள) குபாவாசிகளை நோக்கிச் சென்றார்கள். அப்போது குபாவாசிகள் (ளுஹா) தொழுதுகொண்டிருந்தார்கள். அப்போது "சுடுமணலில் ஒட்டகக்குட்டியின் கால் குழம்புகள் கரியும் நேரமே "அவ்வாபீன்" தொழுகையின் நேரமாகும்" என்று அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

### குறிப்பு:

"அவ்வாபீன்" என்பதும் ளுஹாத் தொழுகைக்குரிய பெயரே. "அவ்வாபீன்" என்ற சொல்லுக்கு "அல்லாஹ்விடம் அடிக்கடி மீள்பவர்கள், பாவமன்னிப்பு தேடுபவர்கள்" என்று பொருள்.

إِن تَكُونُوا صَٰلِحِينَ فَإِنَّهُۥ كَانَ لِلْأَوَّٰبِينَ غَفُورًا

"நீங்கள் நல்லவர்களாக இருந்தால், அல்லாஹ் மீள்பவர்களுக்கு மிக மன்னிப்பவனாக இருக்கின்றான்." பனீ இஸ்ராயீல் 17:25

காசிம் பின் அவ்ஃப் அஷ் ஷைபானீ(ரஹ்) அவர்கள்,முஸ்லிம் 1362

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

5-A

## நபி(ﷺ) அவர்கள் ளுஹாத் தொழுகை குறைந்தது 2 ரக்அத்துகள். அதை விட அதிகமாகவும், 8 ரத்அத்துகளும் தொழுதிருக்கின்றார்கள்

நான் மக்கா வெற்றிகொள்ளப்பட்ட ஆண்டில் அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள் மக்காவின் மேட்டுப் பகுதியில் இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் குளியலுக்காக எழுந்தார்கள். அப்போது அவர்களை ஃபாத்திமா(ரலி) அவர்கள் திரையிட்டு மறைத்தார்கள். (குளித்த) பிறகு தமது ஆடையை வாங்கிப் போர்த்திக்கொண்டார்கள். பின்னர் முற்பகல் தொழுகை (ளுஹா) எட்டு ரக்அத்கள் தொழுதார்கள்.

**குறிப்பு:**

**பிரயாணத்திலும் ளுஹாத் தொழுகையை தொழலாம் என்பதற்கும் இந்த ஹதீஸ் சான்றாக உள்ளது.**

**அம்ர் பின் அபஸா அஸ்ஸுலமீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 1512**

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

5-B

## நபி(ﷺ) அவர்கள் ளுஹாத் தொழுகை குறைந்தது 2 ரக்அத்துகள். அதை விட அதிகமாகவும், 8 ரத்அத்துகளும் தொழுதிருக்கின்றார்கள்

“அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் முற்பகல் நேரத்தில் நான்கு ரக்அத்கள் தொழுவார்கள், அல்லாஹ் நாடிய அளவு கூடுதலாகவும் தொழுவார்கள்.”

ஆயிஷா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 1297

## நபி(ﷺ) அவர்கள் தொடர்ந்து ளுஹாத் தொழுகையைத் தொழாததற்கான காரணம்

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் சில (கூடுதலான) வழிபாடுகளைச் செய்ய விருப்பம் கொண்டிருந்தாலும்கூட, அவற்றைச் செய்யாமல் விட்டுவிடுவதுண்டு. (எங்கே தாம் செய்வதைப் போன்று) மக்களும் அவற்றைச் செய்ய, மக்கள்மீது அவை கடமையாக்கப்பட்டுவிடுமோ எனும் அச்சமே இதற்குக் காரணம்.

ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1295

# ளுஹாத் தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும்

7

முஜாஹித்(ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நானும் உர்வா பின் அஸ்ஸுபைர்(ரஹ்) அவர்களும் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலுக்குள் நுழைந்தோம். அங்கே ஆயிஷா(ரலி) அவர்களின் அறையோடு சாய்ந்து அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அப்போது மக்கள் பள்ளிவாசலில் முற்பகல் நேரத்தொழுகை (ளுஹா) தொழுதுகொண்டிருந்தனர். நாங்கள் அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்களிடம் மக்களின் அந்தத் தொழுகையைப் பற்றிக் கேட்டோம். அதற்கு அவர்கள், "இது (மார்க்க அடிப்படையற்ற) புதிய நடைமுறை (பித்அத்)" என்றார்கள்.

**குறிப்பு:**

மஸ்ஜிதில் இவ்வாறு அனைவரும் கூட்டமாக தொடர்ந்து தொழும் முறையை அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்கள் பித்அத் என்றார்களே தவிர ளுஹாத் தொழுகையை அல்ல என அறிஞர்கள் இதற்கு விளக்கமளிக்கின்றனர். ஏனெனில் ளுஹாத் தொழுகைக்கு அதிகமான ஹதீஸ்கள் சான்றாக உள்ளன.

முஸ்லிம் 2407